**மெதுவாய் நடத்துவார். ஏசாயா 40 : 11**

நினைத்த நேரத்திலே முடியவில்லையே அத்துடன் நினைத்தபடியெல்லாம் முடியவில்லையே என அங்கலாய்க்கும் அன்பரே,

"**மெதுவாய் நடத்துவார்**" ஆனால்

**முடிவு வரை நடத்திடுவார்.**

**ஏசா. 40 : 11 சொல்கிறது :** மேய்ப்பனைப் போல தமது மந்தையை மேய்ப்பார். ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்.

"**நீ ஒரு கறவலாடு**"

ஒருவேளை ஆட்டுக்குட்டியாக இருந்திருந்தால், கர்த்தர் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்திருப்பார்.

"**ஆனால் நீயோ, ஒரு கறவலாடு**"

உன்னை விரட்ட முடியாது. உன்னால் ஓட முடியாது. ஏற்கனவே நீ சுமைகளை சுமந்து சோர்ந்து போனவன். ஆதலால் உன்னை "**மெதுவாய் நடத்துவார்**"

**SLOWLY AND GENTLY**

**உன்னை மெதுவாகவும், கண்ணியமாகவும் நடத்துவார்.**

இந்த மாதத்தில் அடிக்கடி உங்கள் விசுவாச வார்த்தையை கீழ்க்கண்டவாறு அறிக்கையிடுங்கள்.

"**கர்த்தர் என்னை மெதுவாய் நடத்துவார்**"

**கர்த்தர் என்னை கண்ணியமாய் நடத்துவார்**

**கர்த்தர் என்னை முடிவுவரை நடத்திடுவார்** – ஆமென்.

**பக்தன் பாடுகிறார் . .**

நான் விசுவாசிப்போர் இன்னாரென்றறிவேன்
என்னையே படைத்திட்டேன் அவர் கரத்தில்
முடிவு வரை என்னை நடத்திடுவார்
முற்றிலும் திருப்பெயரே
சீயோனிலே என் திட அஸ்திபாரம் கிறிஸ்துவே
அவர் நான் என்றும் நம்பும் கன்மலை

பாடல்களையே பாடிப் பரவசமடையுங்கள்.

**அவரசப்படாதே,** அத்துடன் **ஆத்திரப்படாதே!** கர்த்தர் உன்னை "**மெதுவாய் நடத்துவதற்கு**" ஒப்புக் கொடு. உன்னுடைய வேகத்தில் சென்றால், "நீ மோதி விடுவாய்". "நீ முறிந்து விடுவாய்" சிலநேரம் "நீ உடைந்து விடுவாய்" ஆதலால் தான் கர்த்தர் உன்னை "**மெதுவாய் நடத்துவார்**"

**ஆதியாகமம் 33 : 13 சொல்கிறது,**

அவைகளை ஒரு நாளாவது துரிதமாய் ஓட்டினால், மந்தையெல்லாம் மாண்டுபோம். எனக்கு முன் நடக்கிற மந்தைகளின் கால் நடைக்கு பிள்ளைகளின் கால்நடைக்கும் தக்கதாக மெதுவாய் அவைகளை நடத்திக் கொண்டு வருகிறேன்

யாக்கோபு ஏசாவைப் பார்த்து சொல்கிறார். "துரிதமாய் ஓட்டினால், மந்தையெல்லாம் மாண்டுபோம்." ஆம், நண்பரே உங்களை துரிதமாய் ஓட்டினால், மாண்டு போவீர்கள். ஆதலால் தான், தேவன் உங்களை "**மெதுவாய் நடத்துவார்**"

**2 சாமுவேல் 18 : 5 சொல்கிறது,**

பிள்ளையாண்டானாகிய அப்சலோமை என்னிமித்தம் 'மெதுவாய் நடத்துங்கள்' – என்பதாக.

அன்பு சகோதரனே, சகோதரியே,

என் தேவனாகிய கர்த்தர் உன்னை "**மெதுவாய் நடத்துவார்**" நீயும் உன் பிள்ளையை "மெதுவாய் நடத்து" நீயோ, காயை பறித்து சாப்பிட முயல்கிறாய்! கர்த்தரோ கனிந்த பின் பறித்து தர காத்திருக்கிறார்.

**மத்தேயு 11 : 30 ல் இயேசு சொல்கிறார்.** "என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது" என்பதாக.

**தேவன் மெதுவாக, இலகுவாக நடத்துவார்.**

**2 சாமு. 18 : 4** நீரோ, எங்களில் பதினாயிரம் பேருக்கு சரி, ஆதலால், கர்த்தர் உன்னை நேசிக்கிற படியினால்

**"மெதுவாய் நடத்துவார்"** – ஆமென்.